# வேதாகமத்தில் உள்ள அற்புதங்கள்

வேதாகமம் “அற்புதங்களால் நிறைந்த” புத்தகமாய் உள்ளது என்பது அது தேவனால் ஏவப்பட்டது என்பதை மறுப்பதற்குத் தரப்படும் பொதுவான ஒரு சாக்குப்போக்கு ஆகும். இந்தக் காரணத்திற்காகவே, வேதாகமத்தின் ஏவுதலும் அதிகாரமுடைமையும் என்ற நமது பாடமானது அற்புதங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடல் இன்றி நிறைவற்றதாகிவிடும். வேதாகமத்தில் அற்புதங்களை விவரிப்பதற்கு “Wonder” (அதிசயம்) என்ற வார்த்தையே பரிசுத்த ஆவியானவரால் பெரும்பாலும் பயன்படுத்தப் பட்டுள்ளது. சாதாரண இயற்கையே தன்னில் அதிசயமானது என்றாலும், இயற்கையின் விதிகளுக்கு மிக அரிதான விலக்குகளாய் உள்ள, தேவனால் உண்டான அற்புதங்கள் பற்றிய பல நிகழ்ச்சிகள் வேதாகமத்தில் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விதிவிலக்குகள் மட்டுமே கிறிஸ்தவத்தின் ஆதாரங்களுடன் ஏதாவது தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. இவைகள் தேவன் தமது வல்லமையினால் செயல்படுத்தும் சாதாரண செயல்களில் இருந்து காணக் கூடிய வகையில் மாறுபட்டுச் செல்லுபவையாக உள்ளன. இவைகள் எடுத்துக்காட்டுகளால் மிகத் தெளிவாக விவரிக்கப் படுகின்றன: எகிப்திலும், செங்கடலிலும் மற்றும் வனாந்தரத்திலும் மோசே செய்தவைகள்; அக்கினிச் சூளையிலும், சிங்கங்களின் குகையிலும் தேவனுடைய ஊழியர்களின் அநுபவங்கள்; இயேசு, தண்ணீரைத் திராட்ச இரசமாக்கியது; அவர் உடனடியாகக் குணப்படுத்திய நிகழ்ச்சிகள் மற்றும் அவர் மரித்தோரை எழுப்பியது; அவர், அப்பத்தையும் மீனையும் பலுகச் செய்தது; அவரது சீஷர்(கள்) பாம்புகளைக் கையில் பிடித்தது; இன்னும் மற்றவை.

வேதாகமத்தின் அற்புதங்களுக்குப் பகுத்தறிவுக்கேற்ற விளக்கம் கொடுக்க முயற்சி செய்தல், அல்லது அற்புத ஊழியர்களை திறமை மிக்க உளவியல் அறிஞர்கள் என்று சித்தரித்தல் என்பது பசியோடு இருந்த ஐயாயிரம் மக்களுக்கு உணவளித்தது அல்லது லாசரு உயிரோடே திரும்பி வந்தது போன்ற நிகழ்ச்சிகளை விளக்கப்படுத்தப் போதுமானதல்ல. வேதாகமத்தின் இப்படிப்பட்ட அற்புதங்கள் எல்லாம் வரலாற்று உண்மைகள் என்றோ அல்லது கதையாகக் கூறப்பட்ட விபரங்கள்

*என்றோதான் ஒருவர் கூற வேண்டும். வேதாகம அற்புதங்கள் அவைகளின் நடைமுறைச் செயல் விளைவுப் பயன்பாட்டுடன் கூட, ஒரு தெய்வீக செய்தியை அங்கீகரிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவைகள் மோசேக்கும், கிறிஸ்துவுக்கும் மற்றும் அப்போஸ்தலர்களுக்கும் நம்பிக்கைக்குரிய ஆதாரச் சான்றுகளாய் இருக்கின்றன.*

## *அற்புதங்களை மறுப்பதற்கான மனித அடிப்படை*

*அற்புதங்களை விளக்கப்படுத்துவதற்கு, நிர்பந்திக்கப்பட்ட மற்றும் போதுமற்ற முயற்சிகளுக்கு மேலாக, உளவியலினால் குறிப்பு ஏற்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட செயலானது, வேதாகம அற்புதங்கள் மற்றும் இயற்கை விதிகள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள இடைவெளியை இணைப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு முயற்சியாக இருக்கின்றது. இருப்பினும், அவிசுவாசிகளில் பலர் வேதாகம விபரங்களைத் தவறானதென்று கருதுகின்றார்கள். அவர்கள், "அற்புதங்கள் தொடங்கும் பொழுது, வரலாறு முடிவடைகின்றது" என்று உறுதியுடன் கூறுகின்றார்கள். அவர்கள் அற்புதங்களின் சாத்தியமற்ற தன்மையைக் கற்பனையில் காண்கின்றார்கள். அற்புதங்களின் உண்மை நிலைக்கு எதிராக அவர்கள் பின்வரும் மூன்று முக்கிய மறுப்புக்களை முன் வைக்கின்றார்கள்: (1) "அற்புதத்தைச் சாட்சியினால் நிரூபிக்க முடியாது", (2) "இயற்கையில் மாறாமல் இருக்கும் அறிவியல் விதியானது அற்புதத்தைச் சாத்தியமற்றதாகச் செய்கின்றது'' மற்றும் (3) ''அற்புதங்கள் ஏற்படுத்தினோம் என்ற புறதெய்வக்காரர்களின் உரிமைகோருதல்கள் வேதாகமத்தின் உரிமை கோருதல்களைப் போலவே மதிப்புள்ளவைகளாய் இருக்கின்றன."*

***"அற்புதத்தைச் சாட்சியினால் நிரூபிக்க முடியாது"***

*ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான, கடவுள் நம்பிக்கை யற்றவராயிருந்த டேவிட் ஹியூம் (1711-76) என்பவர், சாட்சி எவ்வளவு நம்பிக்கைக்குரியதாய் இருந்தாலும், அற்புதத்தைச் சாட்சியினால் நிரூபிக்க முடியாது என்று உறுதியாகக் கூறினார். அவர், அற்புதங்களை விவாதத்திற்குரிய பொருள் என்பதைக்காட்டிலும், கேலிக் கூத்தானவை என்பதாகவே கருதினார் (*David Hume, *An Enquiry Concerning the Human Understanding and an Enquiry Concerning the Principles of Morals). இருப்பினும் ஹியூம் என்பவர் எடுத்துக் கொண்ட நிச்சயமற்ற இவ்வித நிலைப்பாடானது, நம்பிக்கைக்குரிய சாட்சியத்தின் மதிப்பு என்ற உலகத்தின் கருத்துக்கு எதிர்ப்பானதாக உள்ளது. உலகத்தின் சட்ட அமைப்பானது சாட்சியத்தின் வார்த்தையினால் ஆன உண்மைகளினாலேயே உறுதியான கட்டமைப்பைப் பெற்றிருக்கின்றது. மற்றும், ஜார்ஜ் வாஷிங்டன், மகாத்மா காந்தி போன்றோரின் வரலாற்று ஆதாரங்கள் முதலியனவற்றின் வரலாற்றுப் பதிவேடுகளின் நம்பகத் தன்மையானது சாட்சியத்தின் அடிப்படையிலேயே இருக்கின்றன.*

*நம்பத் தகுந்த சாட்சியத்தின் மிகச் சரியான தன்மை என்பது*

இயற்கையில் நிலையாக உள்ள ஒரு இயல்பான விதியை(சட்டத்தை)ப் போன்றதாகும். இயற்கையில் நிலைத்த தன்மையானது மனித அனுபவத்தால் உறுதிப்படுத்தப்பட்டு, இயற்கை விதியாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அது போலவே, சாட்சியத்தின் நம்பகம் பற்றிய மிகச் சரியான தன்மையானது மனித அனுபவத்தால் உறுதிப்படுத்தப்பட்டு, இயற்கை விதியாக (சட்டமாக) ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஒருவர் அற்புதங்களை மறுப்பதற்கு இயற்கையின் மாறாத் தன்மை பற்றிய விதியைப் பற்றிப் பிடித்து கொண்டிருப்பாரேயானால், அவர் மனிதருடைய சாட்சியத்தின் நம்பகத் தன்மை என்ற விதியை (சட்டத்தை) மறுக்கின்றார். அவர் இயற்கை விதியொன்றை இன்னொரு இயற்கை விதிக்கு எதிராக அமைக்கின்றார். அவர் (இயற்கை விதியை மீறுகின்ற) ஒரு அற்புதத்தை ஏற்றுக் கொண்டு இன்னொன்றைத் தவிர்க்கும்படி வேண்டுகின்றார்!

ஹியூம் என்பவர் தமது சொந்த தனிப்பட்ட அனுபவம் என்ற குறுகிய வரையறைகளைத் தவிர, இயற்கையின் நிலைத்த தன்மையானது சாட்சியத்தால் ஆதரிக்கப்படுகிறது என்பதிலும் நம்பிக்கையுடையவராய் இருக்கின்றார். "மற்ற காலங்களிலும் நாடுகளிலும்" நடந்த எல்லாவற்றையும் அவர் சாட்சியத்தினாலேயே அறிந்தார். ஆகையால் அவர் சாட்சியத்தைத் தூக்கியெறிய சாட்சியத்தை ஏற்றுக் கொண்டார். சில வேளைகளில் ஹியூம் என்பவர் நிரூபணத்தை நிலைநாட்டுவதில் மனித சாட்சியத்தின் போதுமற்ற தன்மை கொண்ட தனது காரண அறிவின் உண்மையற்ற தன்மையை உணர்ந்தார். இதை அவர் பின்வருமாறு ஒப்புக் கொண்டார்: "அற்புதங்கள் அல்லது இயற்கையின் வழக்கமான இயல்புக்கு மீறிய செயல்கள் சாத்தியமானவைகளே என்று மனித சாட்சியத்தின் நிரூபணம் என்ற வகையிலான கூற்றினால் நான் ஒத்துக் கொள்ள வேண்டியதாகின்றது" அவர் தாம் ஏற்றுக் கொள்ள விருப்பமாயிருந்தவைகளுக்கு ஒரு எடுத்துக் காட்டைக் கூடப் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> இவ்விதமாக, எல்லா மொழிகளிலும், எல்லா எழுத்தாளர்களும் 1600 ஜனவரி 1ம் நாள் முதல் எட்டு நாட்களுக்கு இப்பூமி முழுவதிலும் முழு இருட்டாய் இருந்தது என்று ஒப்புக் கொள்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம்: இந்த அசாதாரணமான நிகழ்ச்சியைப்பற்றிய பாரம்பரியக் கருத்துக்கள் இன்னமும் பலமானதாகவும் உயிருள்ளதாகவும் மக்கள் மத்தியில் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம்: அதாவது, அயல் நாடுகளிலிருந்து திரும்பிய பயணிகள் யாவரும் ஒரு சிறிய மாறுதல் அல்லது முரண்பாடு கூட இல்லாமல் அதே பாரம்பரியக் கருத்தின் விபரங்களைக் கொண்டு வருகின்றார் கள்: அப்படியிருந்தால், நமது தற்காலத்திய தத்துவ ஞானிகள் அந்த உண்மையைச் சந்தேகிப்பதற்குப் பதிலாக, அதை உறுதியானதே என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது தெளிவானதாகும், ......

அற்புதம் ஒன்றை நிலைநாட்டுவதற்கு மனித சாட்சியத்தின் வலுவைத் தாம் உணர்ந்து கொண்டதாக அவர் ஒப்புக் கொண்ட பிறகு, பின்வரும் விதிவிலக்கினால் அவர், மதத்திற்கெதிரான தமது தப்பெண்ணத்தைக்

*காண்பித்தார்:*

> *ஆனால், இந்த அற்புதம் என்பது புதியதொரு மதத்திற்குரியது எனப்பட வேண்டுமென்றால் அதன் சூழ்நிலையானது ஏமாற்றுதலுக்கான ஒரு முழுமையான நிரூபணமாய் இருக்க வேண்டும், இது முழு அறிவுடைய மனிதர்கள் யாவரும் உண்மையை மறுக்கும்படி செய்வதுடன், மேலும் பரிசோதனை செய்யத் தேவைப்படாதபடி மறுக்கக் கூடப் போதுமானதாயிருக்கிறது.*

*சாட்சியத்தினால் நிரூபிக்கப்படும் மத சார்பற்ற அற்புதத்தைப் பற்றிய ஹியூமின் குறிப்பிடுதலுடன் கூட, அவர் அறிக்கை செய்யப்பட்ட அற்புதமானது அதன் தவறான தன்மையுடன் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் ஒப்புக் கொண்டது இன்னும் அதிக விந்தையாய் இருக்கின்றது: "தவறானது எனக்கூறும் சாட்சியமானது தான் நிலைநாட்ட முயற்சிக்கும் உண்மையை விட அதிக விந்தையானதாய் இருந்தால் ஒழிய எந்த சாட்சியமும் அற்புதத்தை நிலைநாட்டப் போதுமானதல்ல …" என்றார். ஹியூம் என்பவர், வேதாகமம், அதன் எழுத்தாளர்கள் மற்றும் சத்தியத்திற்கான அதன் செல்வாக்கு ஆகியவை, வேதாகமத்தின் அற்புதங்கள் உண்மையற்றவைகளாயிருந்தால் மனிதரின் கேள்விகளுக்குப் பதில் அளிக்காதவைகளாக, பதில் அளிக்க முடியாதவைகளாகப் போயிருக்கும் என்பதைக் கவனிக்கத் தவறி விட்டார். உண்மையாயுள்ள ஒவ்வொன்றிற்குமான வேதாகமத்தின் செல்வாக்கானது அதன் அற்புதங்கள் உண்மையானவைகளே என்பதை அறியச் செய்கின்றது, ஆனால் அதன் அற்புதங்கள் கதைகளா என்பதை அந்தச் செல்வாக்கானது விளக்கப்படுத்த முடியாததாயிருக்கின்றது.*

*கிறிஸ்தவத்தினால் அறிக்கை செய்யப்பட்ட அற்புதங்கள் யாவும் ஏதோ ஒரு மூலையிலே நடந்தவைகள் அல்ல; அவைகள் வெளியரங்கமாகச் செய்யப்பட்டன. மற்றும், அவைகள் மிகவும் பல்வகைப் பட்டவைகளாகவும், எழுபது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கால இடைவெளியில் நடந்தவைகளாகவும் இருந்தன. அவைகள் உண்மையற்றவைகள் என்று - அதாவது தங்களின் விசுவாசத்திற்கென்று மரித்த ஆயிரக்கணக்கான மக்கள் வஞ்சிக்கப்பட்டார்கள் என்று - கற்பனை செய்வதென்பது அற்புதங்களின் உண்மை நிலையை ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் கடினமானதாகும். எடுத்துக்காட்டாக, உணவை (அப்பத்தைப்) பலுகச் செய்த அற்புதத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் அடங்கியிருந்தார்கள். உணவுக் குறைவைக் கண்டிருந்த அப்போஸ்தலர்கள் அது பெருக்கப்படுவதைக் கவனித்து, அதை விநியோகித்து, தொடக்கத்தில் இருந்தவைகளைக் காட்டிலும் அதிகமானவைகளைச் சேர்த்து இருக்க வேண்டும் அல்லது தங்கள் அறிக்கையை அவர்கள் உண்மையற்றதாய்க் கொடுத்திருக்க வேண்டும். ஏமாற்றுதல் என்பது சாத்தியமானதாய் இருந்ததில்லை. அதிகமான அப்பங்கள் மற்றும் மீன்களுக்காகக் கடற்கரையைச் சுற்றிலும் இருந்து வந்தவர்கள், அப்பம் பலுகச் செய்ததைப்*

போலியான செயல் என்று நினைத்திருந்ததில்லை என்பது உறுதியாகும்.

இயேசு, உலகின் மிகப் புத்திசாலித்தனமான போலி நடிப்புக்காரராயிருந்தார் என்றோ மற்றும் அவர் உலகத்தின் மிகக் கொடிய மனிதராய் (இளைப்பாறுதல் மற்றும் இரட்சிப்பு தருவதாகப் பொய் கூறியது) இருந்தார் என்றோ கற்பனை செய்வதென்பது, அற்புதங்களின் உண்மை நிலையை ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் மிகவும் கடினமானதாகும். அவர் வேதனை தருபவராகவும், (மனிதர்களின் நம்பிக்கையை இகழும்) வக்கிரமனம் கொண்டவராக இருந்தார் என்பதும், அல்லது அவர் உலகிலேயே மிக மோசமான வஞ்சிக்கும் மனிதராய் இருந்தார் என்பதும் எந்த அற்புதத்தைக் காட்டிலும் அதிகமாய் நம்ப முடியாததாய் இருக்கின்றது.

ஹியூமின் காரண அறிவானது, அற்புதம் என்பது சாத்தியமற்றதாய் இருக்கிறது, ஆகையால் நடக்க முடியாத ஒன்றை எந்த ஒரு சாட்சியும் உறுதிப்படுத்த முடியாதென்று கற்பனை கொள்கின்றது. இருப்பினும், ஒரு நாத்திகரோ அல்லது அறிவுவாதியோ மட்டுமே இப்படிப்பட்டதொரு கற்பனையை மேற்கொள்கின்றனர் என்பதால், ஹியூமின் காரண அறிவானது நாத்திகர் அல்லது அறிவுவாதியை மட்டுமே இணங்கச் செய்வதாய் இருக்கின்றது.

ஹியூமின் சிந்தனையை ஆட்கொண்ட எதிர்மறையான, இருள் நோக்கிய எண்ணப் போக்கானது அவரை சந்தேகம் என்ற கொடும் நோய் பற்றியவராக்கி விட்டதாகத் தோன்றுகின்றது. இப்படிப்பட்ட சிந்தனையின் தவிர்க்க முடியாத விளைவானது, அவரது நம்பிக்கையின்மை, குழப்பம் மற்றும் நம்பிக்கையற்ற தன்மை ஆகியவற்றில் காணப்படுகின்றது. அவரது காரண அறிவானது "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும்" (கொலோ. 2:8) அவரைச் சீரழித்து விட்டது. ஹியூம் என்பவர், தங்கள் ஆசீர்வாதங்களுக்கு நன்றி தெரிவிக்காதவர்களில் ஒருவராக ஆனால் "தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" (ரோமர் 1:21) என்று கூறப்படத் தக்க மனிதர்களில் ஒருவராக ஆனார். அவர் தமது சொந்த தந்திர வலைகளினால் பாதிக்கப்பட்டு, அவநம்பிக்கையை விதைத்து அதையே அறுத்துத் தன்னையே வஞ்சித்துக் கொண்ட மனிதரானார்.

அற்புதங்களின் நிரூபணமாக மனித சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பது என்பது அறிவுக்கு ஏற்புடையதல்ல என்பதோடு, நிர்ப்பந்திக்கப் பட்டதாகவும் உள்ளது.

### "இயற்கையில் மாறாமல் இருக்கும் அறிவியல் விதியானது அற்புதத்தைச் சாத்தியமற்றதாகச் செய்கின்றது"

இயற்கையில் மாறாமல் இருக்கும் அறிவியல் விதியானது - அதாவது, நிலையான வகையிலேயே எப்பொழுதும் செயல்படும் இயற்கையானது - அற்புதங்களுக்கு இடம் கொடுப்பதில்லை என்பது அற்புதங்களை எதிர்ப்பதற்குப் பயன்படும் இரண்டாவது வாதமாக இருக்கின்றது.

*பெரும்பான்மையான மக்களால் அனுபவிக்கப் படுகின்ற ஒவ்வொன்றும் இயற்கையானதாக, தர்க்கரீதியான காரணம் கொண்டதாக இருப்பதால், சாதாரண, இயற்கையான காரணமற்ற அனுபவமாகக் காணப் படுவதெதுவும் நடைபெற முடியாது என்று உணரப் படுகின்றது/ வாதிடப்படுகின்றது.*

*இருப்பினும், ஒரு நபருடைய எல்லா அனுபவமும் இயற்கை யானதாகவும், விளக்கக் கூடிய காரணம் கொண்டதாகவும் இருக்கிறதென்ற உண்மையானது, அகில உலகின் அனுபவமும் அதே போலவே இருக்கும் என்று அர்த்தப்படுவதில்லை. அறிவியல் அறிஞர் ஒருவர் இன்றைய நாட்களின் நிகழ்ச்சிகளை விளக்கம் தரும் காரணங்களைக் கொண்டு சரியாகக் கவனித்து உணரலாம்; இந்தக் கவனிப்பின் அடிப்படையில் அவர் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் எதுவும் ஒருபொழுதும் இருந்ததில்லை என்று (சரியற்ற விதமாயிருந்தாலும் கூட) முடிவு செய்யலாம். இப்படிப்பட்டதொரு கற்பனையை மேற்கொள்வதில் அவர் தமக்கு உரிய வரைமுறைப் பகுதிகளைக் கடந்து அப்பால் சென்று விடுகின்றார். இப்பொழுது நடக்கின்றவைகள் பற்றி அவர் சரியாகச் சாட்சியம் கொடுக்கலாம், ஆனால் கடந்த காலத்தில் நடந்ததென்ன என்பதை அவர் அறிவதற்கு வழியில்லை. அவரது முடிவானது அறிவியல் பூர்வமற்றதாக உள்ளது; அறிவியல் அறிவு மற்றும் சாதனத்திற்கு அந்நியமான உள்ள பகுதிகளுக்கு அவர் அத்துமீறிச் சென்றிருக்கின்றார். இயல்பானவைகளைக் கைவிட்டு விட்டு, கட்புலனாகாக் கோட்பாடு என்னப்படும் நிரூபிக்க இயலாத யூகத்தின் வட்டத்திற்குள் தம்மையே உட்புகுத்திக் கொண்டுள்ளார். இப்பொழுது இயற்கையில் அற்புதங்களின் குறைவு என்பது வரலாற்றில் அவை இருந்த உண்மைத் தன்மையை மாற்றுவதில்லை. இயல்பறிவியல் அல்ல வரலாற்று அறிவியலே அந்தத் தலைப்பைப் பற்றிப் பேசலாம். அறிவியலின் அநுபவமானது அண்ட வெளி மற்றும் காலம் ஆகியவற்றினால் வரையறைக்குட்படுத்தப்படுவதால், அது அறிவியல் எங்கு எப்பொழுது பேச வேண்டும் என்பதைத் தகுதிப்படுத்தக் கூடியதாகின்றது.*

*நித்தியமான அற்புதமற்ற ஒரு பிரகடனத்தை அறிவியல் அறிஞர்கள் வெளியிட்டால், அவர்களின் உபதேசத்தைக் கூட அவர்கள் பொருள்களின் தொடக்கம், உயிரின் தொடக்கம் மற்றும் நிரூபணமற்ற பரிணாமக் கொள்கையென்ற தத்துவங்கள் ஆகியவற்றிற்கான விளக்கமின்றி அவர்கள் மீறிச் செல்வதில்லை. இயற்கையின் சீரான தன்மையென்பது அற்புதங் களைத் தடை செய்யுமென்றால், அது பொருள்களின் தொடக்கம், உயிரின் தொடக்கம் மற்றும் வாழ்வின் பரிணாமம் ஆகியவற்றையும் தடை செய்வதாய் இருக்குமே. அப்படியிருந்தால், பழங்கால மனிதக் குரங்கின் மூளையில் இருந்து மனித மூளை மாற்றம் பெற்று வந்தது என்ற கொள்கையானது வேதாகமத்தில் உள்ள எந்த ஒரு அற்புதத்தையும் போலவே மாபெரும் தன்மையுடையதாகும் அல்லவா?*

*சாட்சியங்கள் போதுமற்றதாயிருக்கும் நிலை நம்பக் கூடியதல்ல என்ற விவாதத்தின் அடிப்படையிலான கருத்தைப் போலவே, கடந்த கால*

அற்புதம் எதுவும் குறைவுள்ளது என்பதற்கு இயற்கையால் முன் வைக்கப்படும் சீரான தன்மையின் அடிப்படையில் அமையும் கருத்தும் விலக்கப்படுகின்றது.

**“அற்புதங்கள் ஏற்படுத்தினோம் என்ற புறதெய்வக்காரர்களின் உரிமைகோருதல்கள் வேதாகமத்தின் உரிமைகோருதல்களைப் போலவே மதிப்புள்ளவைகளாய் இருக்கின்றன”**

வேதாகமத்தின் அற்புதங்களுடைய உண்மை நிலையைக் குறைத்துப் போடுவதற்கு அவைகளைப் புறதெய்வக்காரர்கள் மற்றும் பிற மதத்தவரின் நிரூபணமற்ற அற்புதங்களுடன் வகைப்படுத்தி இகழ்ந்துரைப்பது என்பது மூன்றாவது முக்கியமான விவாதமாக மேற்கொள்ளப்படுகின்றது. இருந்தாலும் கள்ள நோட்டுக்களில் உள்ள குறைபாடுகள் உண்மையான பணத்தை அடையாளப்படுத்த உதவுவது போலவே, கள்ள அற்புதங்கள் மற்றும் உண்மையான அற்புதங்களின் பண்புகள் ஒப்பிடப்படலாம். வேறுபாடுகளைக் கவனிப்பதன் மூலம் ஒருவர், உண்மையான அற்புதங் களையும் வஞ்சிக்கும் அற்புதங்களையும் உடனடியாக வேறுபடுத்திக்காண முடியும்.

முதலாம் நூற்றாண்டின் மந்திரவாதியான அப்போலினியஸ் அற்புதங்களைச் செய்ததாகக் கூறப்படுகின்றது; ஆனால் சான்றுகளைப் பரிசோதிக்கும் பொழுது அது குறைவு படுகின்றது. இப்பொழுது இருக்கின்ற ஒரே ஒரு ஆதாரமானது முதல் நூற்றாண்டில் இருந்து வருவதற்குப் பதிலாக மூன்றாம் நூற்றாண்டில் இருந்து வருகின்றதாயிருக்கின்றது, மற்றும் அது கண்ணால் கண்ட சாட்சியங்களிடம் இருந்தல்ல, இரண்டாம் நபரின் அறிக்கையாகவே இருக்கின்றது.

இயேசுவைத் தாழ்த்துவதற்காக அப்போலினியஸ் பற்றிய புராணங்களைப் பயன்படுத்துவதற்கு இலேசான காரணம் ஒன்றைப் பெற்றிருந்தால் கூட, விமர்சகர்கள் அவைகளைப் பயன்படுத்தி யிருப்பார்கள். அற்புதங்களைப் பற்றிய ஆதாரமற்ற மூன்று அறிக்கைகளை டேவிட் ஹியூம் பயன்படுத்தினார் - ஆனால் இந்த அறிக்கைகளுக்கு உயிருடன் சாட்சி கொடுத்தவர்கள் எவரும் இல்லை. இயேசுவின் செயல்கள் மற்றும் உபதேசங்களின் உண்மை நிறைந்த தன்மைக்குத் தற்காப்புவாதமாக கண்ணால் கண்ட சாட்சிகள் தாங்கள் உயிருடன் இருக்கும் பொழுதே சாட்சி கொடுத்தார்கள்.

நிரூபணமற்ற மற்ற அற்புதங்கள், இக்னேஷியஸ் லொயோலோ மற்றும் ஃபிரான்ஸிஸ் சேவியர் என்ற பெயர்களுடன் தொடர்பு படு த்தப் பட்டுள்ளன, ஆனால் அவைகள் அந்த மனிதர்களின் காலத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, பல மைல்கள் தொலைவில் தோன்றிய அறிக்கைகளினாலேயே தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. இயேசுவோடு தொடர்புடைய அற்புதங்களோ, இயேசு வாழ்ந்த அதே தலைமுறையில் தோன்றிய அறிக்கைகளாலும், அவர் செய்த அற்புதங்களைத் தங்கள் சொந்த கண்களால் கண்ட மக்களினாலும் ஆதாரப் படுத்தப்படுகின்றன.

வேதாகம ரீதியில் இல்லாத அற்புதங்களின் உரிமை கோருதல்கள்

உறுதிப்படுத்துவதில் குறைபாடுள்ளவைகளாய் இருப்பதோடு கூட, நிரூபணமற்ற இந்த அற்புதங்கள் வேதத்தில் உள்ளவற்றிலிருந்து மாறுபட்ட ஆவியைக் கொண்டிருக்கின்றன. இயேசுவின் அற்புதங்கள் அவரது சாட்சியத்திற்கு ஆதாரமாயிருந்ததோடு, அவைகள் பயன் நிறைந்தவை களாகவும், மனிதருக்கு நன்மை செய்வதாகவும் இருந்தன. இயேசு பசித்தோருக்கு உணவளித்தார், ஊனம் மற்றும் வியாதி கொண்டிருந்தோரைக் குணப்படுத்தினார், மற்றும் கவலைப்பட்டோரை ஆறுதல் படுத்தினார். வேதாகம ரீதியில் இல்லாத, அற்புத உரிமைகோருதல்களில் இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையே உள்ளது, இது சீமோன் மேகஸ் போன்றவர்கள் செய்த தந்திர வேலைகளில், அதாவது கல்லினால் ஆன நாயைக் குறைக்கச் செய்தல், மற்றும் சிலைகளைப் பேசச் செய்தல் போன்றவற்றில் காணப்படுகின்றது. மேகஸ் தானே ஒரு வெள்ளாடாக மாறி, எரியும் நிலக்கரியின் மேல் உருண்டு சென்றதாகவும் கூறப்பட்டது.

வேதாகம ரீதியில் இல்லாத நிரூபணமற்ற அற்புதங்களில் தாழ்வான ஆவிக்கான ஆதாரம் இருப்பதோடு, அவைகளின் நேரடியான நோக்கமும் மாறுபட்டதாயிருந்தது. வேதாகம அற்புதங்களின் அடிப்படை நோக்கம் சான்று கொடுப்பதாகும், வேதாகம ரீதியில் இல்லாத அற்புதங்கள், அவைகளைச் செய்தவர்களின் மதத்தை ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருந் தவர்களால் உரிமைகோரப்பட்டன, அற்புதங்கள் என்று கூறப்பட்டவைகள் அவர்களின் மதத்திற்கான நிரூபணமாய் இராமல், அதன் இணைப்பாக மட்டுமே இருந்தன.

வேதாகம அற்புதங்களின் உண்மைத் தன்மைக்கு எதிரான முக்கிய மறுப்புரைகள் எல்லாம் கனம் குறைந்தவையாக, நம்ப முடியாதவைகளாக இருக்கின்றன.

## வேதாகமத்தின் அற்புதங்களை ஏற்றுக்கொள்வதற்கான அடிப்படை

வேதாகமத்தின் அற்புதங்களுடைய உண்மைத் தன்மையின் உரிமை கோருதல்களைக் குறைந்த பட்சம் நான்கு பேருண்மைகள் ஆதரிக்கின்றன: (1) அற்புதங்களை விவரித்துக்கூறும் புத்தகமானது முழுமையாக நம்பத் தக்கது, (2) வேதாகம அற்புதங்கள் போலித் தன்மையின் அடையாளங்கள் எதையும் பெற்றிருப்பதில்லை, (3) இயேசுவின் சமகாலத்து விரோதி களும், பின்னாட்களில் வந்த மத நம்பிக்கையற்றவர்களும் அவரது அற்புதங்களைச் சந்தேகிக்கவில்லை, மற்றும் (4) இயேசுவின் வாழ்வை விளக்கப்படுத்துவதற்கு அற்புதங்கள் அவசியமாய் இருக்கின்றன.

### அற்புதங்களை விவரித்துக்கூறும் புத்தகத்தின் நம்பகத்தன்மை

பல ஆதார வரிசைகள் (வரலாறு, புதைபொருள் ஆய்வு, தற்செயலான சங்கேதக் குறிப்புகள், எழுத்தாளர்களின் பண்பு மற்றும் எழுத்துக்களின் செயலுருவாக்கம்), வேதாகமத்தை உலகின் மிக அதிகமான நம்பிக்கைக்கு

உகந்த புத்தகம் என்று ஏறக்குறைய உலகளாவிய விதத்தில் ஒப்புக் கொள்ளப்படும் முடிவைக் கொண்டு வரும்படி குவிந்துள்ளன. வேதாகமம் என்பது நம்பத் தகுதியற்ற புத்தகமாய் இருந்தால், அவற்றில் உள்ள இயற்கைக்கு மேம்பட்ட நிகழ்ச்சிகளைக் கதைகள் என்று கூறி மறுக்க நல்லறிவு நம்மை அழைத்திருக்குமே. இதற்கு மாறாக, வேதாகமம் என்பது, முரண்படவே முடியாததாக, எழுதப்பட்டவைகளிலேயே அதிகமான நம்பிக்கைக்கு உரியதாக இருந்ததென்றால், அதில் உள்ள அற்புத வரலாறுகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும்படியாக நல்லறிவு நம்மை அழைக்கும். வேதாகமத்தின் நம்பகத் தன்மையை ஒதுக்கி வைக்க முடியாதென்றால், தர்க்க ரீதியான அதன் அற்புதங்களும் மறுக்கப்பட முடியாது. நம்பிக்கைக்குத் தகுதியான வேதாகமத்தின் இந்தப் பண்பே அது விளக்கிக் கூறும் அற்புதங்களின் உண்மை நிலைக்குப் பலத்த ஆதாரமாயுள்ளது.

**வேதாகமத்தின் அற்புதங்கள் போலித் தன்மையின் அடையாளங்கள் எதையும் பெற்றிருப்பதில்லை**

வேதாகமத்தின் அற்புதங்களினுடைய வரலாற்று ஆதாரத்தை ஒப்புக் கொள்வதற்கு இரண்டாவது உறுதியான காரணமாயிருப்பது, அதில் போலித்தன்மையின் அடையாளங்கள் எதுவும் இல்லாதிருப்பது ஆகும். ஏமாற்றுக்காரர் ஒருவர் முடிந்த அளவு விளம்பரம் பெற்றுக் கொள்ளும் வகையிலேயே வெளிப்படையாக வேலை காட்டுவார், ஆனால் இயேசு தமது கிரியைகளைச் சில வேளைகளில் வெளிப்படுத்திக் கூறாதபடி வினோதமாய்த் தடை செய்தார். அவரை ஒரு தெய்வீகமானவராக அல்லாமல் அற்புதம் செய்பவராக மட்டுமே கண்டவர்கள் சிந்தனையற்ற கும்பலின் ஆவியைத் தவிர்க்கவே அவர் இப்படிச் செய்தார் என்பது உறுதி. வெளியரங்கப்படுத்துவதைத் தடை செய்ய அவர் என்ன காரணம் கொண்டிருந்தாலும், ஏமாற்றுக்காரர் ஒருவர் அப்படிச் செய்ய மாட்டார்.

மற்றும், ஏமாற்றுக்காரர் ஒருவர், அற்புதங்களின் மதிப்பை உயர்த்துவதற்காகத் தமது வல்லமையில் செய்யக் கூடிய எல்லாவற்றையும் செய்வார். தாழ்மையான நாசரேத்தூர்த் தச்சரோ, சார்பு மதிப்புகளின் முழுப் புரிந்து கொள்ளுதலிலும் கூடச் சில வேளைகளில் அற்புதங்களின் மதிப்பைத் தள்ளுபடி செய்தார். அவருடைய தெய்வீகத்தை ஏற்றுக் கொள்வதில்லை என்று உறுதிப்பாட்டுடன் இருந்தவர்களுக்கு, அற்புதங்கள் ஒரு வீண் முயற்சியாகவே இருந்திருக்கும். அற்புதங்கள் அவற்றிலேயே முடிவடைந்து விடும்படி அவர் அனுமதிக்கவில்லை. ஏமாற்றுக்காரர் எவரும் அற்புதங்கள் செய்யும் தம் திறமையை இவ்வளவாய் குறைத்துவிட மாட்டார்.

யோவான்ஸ்நானன் எந்த அற்புதங்களும் செய்ததாகச் சான்றளிக்கப் படாதிருந்தார் என்ற உண்மையானது, சுவிசேஷ எழுத்தாளர்கள் கற்பனை விபரங்களைக் கொடுக்க ஆர்வமின்றி இருந்ததைக் காட்டுகின்றது. அத்துடன், இயேசு தமது வெளியரங்கமான ஊழியத்திற்கு முன் அற்புதங்கள் செய்திருந்ததாக அவர்கள் கூறவில்லை என்ற உண்மையானது,

அவர்கள் கதைகளைக் கண்டுபிடித்து எழுதாமல், வரலாற்றை மட்டுமே எழுதினார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. மற்றும், மரித்தோரில் இருந்து எழுப்பியதாகச் சில நிகழ்ச்சிகள் மட்டுமே பதியச் செய்திருப்பது என்பதும் அவர்கள் வெறும் உற்சாக ஆர்வம் மட்டும் உள்ளவர்களாய் இருந்ததில்லை என்று சுட்டிக்காட்டுகின்றது. ஏரோது அரசருக்காக ஒரு காட்சியை அரங்கேற்றுவதற்கு இயேசுவின் மறுப்பானது மந்திரவாதி சீமோன் செய்திருந்தவைகளுக்கு நேர் எதிர்மாறானதாகும்.

சுவிசேஷங்கள் போலித் தன்மையின் அடையாளங்களைப் பெற்றிருப்பதற்குப் பதிலாக, அதற்கு நேர் மாறானதே உண்மையாய் இருக்கின்றது. பிரெஞ்சுப் பகுத்தறிவுவாதியான ஜோசப் ரெனன் என்பவர் சுவிசேஷங்கள் நம்பத் தகுந்த உள்ளான அடையாளங்கள் எல்லாவற்றையும் கொண்டுள்ளன என்று கூறினார், மற்றும் அந்தப் புறம்பான சாட்சியமானது முக்கிய உண்மைகளை உறுதிப்படுத்துகின்றது.

### இயேசுவின் விரோதிகள் (கூட) அவரது அற்புதங்களைப் பற்றிச் சந்தேகப்படவில்லை

சுவிசேஷ அற்புதங்களின் உண்மைத் தன்மைக்கு மூன்றாவது பலத்த நிரூபணமாயிருப்பது, இயேசுவின் சமகாலத்திய விரோதிகளும் பின்னாட்களில் வந்த மத நம்பிக்கையற்றவர்களும் அவரது அற்புதங்களை மறுத்ததில்லை என்ற உண்மையே ஆகும். அவர்களில் பெரும்பாலோர், இயேசுவின் தெய்வீகத்தை விசுவாசியாதவர்களாய் இருந்தார்கள், ஆனாலும் அவரது அற்புதங்களைப் பற்றி அவர்கள் கேள்வியெழுப்பியதாகப் பதிவேடு ஒன்றும் காணப்படவில்லை.

இயேசு லாசருவைக் கல்லறையிலிருந்து எழுப்பியதையும், மற்ற அற்புதங்களைச் செய்ததையும் உண்மையென்று பரிசேயர்கள் ஒப்புக் கொண்டார்கள். “அவர்கள், ‘நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே. நாம் இவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்கள்’ என்றார்கள்” (யோவா. 11:47, 48). அவர்கள் சந்தேகம் கொண்டிருந்தால், லாசருவின் இருப்பிடம் செல்ல அவர்கள் ஓரிரு மைல்களே பயணம் செய்ய வேண்டியிருந்தது. லாசரு எழுப்பப்பட்டிருந்ததை மறுப்பதற்குப் பதிலாக அவர்கள் ஆதாரத்தை அழிக்க முயற்சி செய்து லாசருவைக் கொலை செய்ய ஆலோசித்தார்கள்.

அற்புத வல்லமைகள் இயேசுவில் கிரியை செய்கின்றன என்பதை நம்பிய ஏரோது அந்திப்பா (மத். 14:2) அவைகளை நேரடியாகக் காண விரும்பினார் (லூக். 23:8). இயேசு மோசடி செய்பவரல்ல என்பதற்கு யூதாஸ் காரியோத்து சாட்சி கொடுத்தார் (மத். 27:3, 4). இயேசு விசாரிக்கப்பட்ட போது அவர் மீது குற்றம் சாட்டியவர்கள் குற்றத் தீர்வையிடுவதற்குச் சாக்குப் போக்கு ஏதாவது அகப்படுமா என்று தேடினார்கள். அவர்கள் பொய்ச்சாட்சிகள் பலரை அமர்த்தியும் (மத். 26:60; மாற். 14:55, 56) இயேசுவின் அற்புதங்கள் உண்மையற்றவை என்று ஆணையிட அவர்கள்

ஒருவரையும் காண முடியாதிருந்தது.

பெந்தெகொஸ்தே நாளன்று, ஆயிரக்கணக்கான மக்களிடத்தில் பேதுரு இயேசுவைப் பற்றிப் பேசினார், அம்மக்களில் இயேசுவைச் சிலுவையில் அறைந்த பலரும் இருந்தார்கள். அவர் எவ்வித வழக்குமின்றி, இயேசுவானவர், " நீங்கள் அறிந்திருக்கிறபடி உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து" (அப். 2:22) என்று அறிவித்தார். உதவியற்றிருந்த சப்பாணியொருவரைக் குணப்படுத்தியது பற்றி, கிறிஸ்தவத்தை வெறுத்தவர்களே, ''வெளியரங்கமான அற்புதம்'' நடந்திருந்ததென்றும் ''அதை நாம் இல்லையென்று சொல்லக் கூடாது'' (அப். 4:16) என்றும் ஒப்புக் கொண்டார்கள். போலிச் செயல்களை அறிந்திருந்த மந்திரவாதியான சீமோன், பிலிப்பு "அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும்" நடப்பித்ததைக் கண்டு பிரமித்தான் (அப். 8:13).

இயேசுவினுடைய அற்புதங்களின் உண்மைத் தன்மையை அவரது சமகாலத்து எதிரிகள் ஏற்றுக் கொண்டதோடு, பின்னாளில் வந்த அவிசுவாசிகளும் கூட அப்படியே செய்தார்கள். Talmud என்ற புத்தகத்தில் யூத ரபீக்களின் எழுத்துக்கள், இயேசுவின் அற்புதங்கள் உண்மையானவை என்றும், அவைகள் அற்புத வித்தையினாலோ அல்லது "யேகோவாவின் ஆராதனைக்குரிய வல்லமையான நாமத்தினாலோ" நடத்தப் பெற்றிருக்கும் என்று ஒப்புக் கொள்ளுகின்றன.

புறஜாதியைச் சேர்ந்த அவிசுவாசிகள் கிறிஸ்தவத்தின் குறை பாடுகளைத் தேடித் திரிந்தாலும், அவர்கள் சுவிசேஷ அற்புதங்களின் உண்மை நிலையைத் தாக்கவில்லை. இரண்டாம் நூற்றாண்டில், செல்சஸ் என்பவர் இயேசுவின் மதத்திற்கு எதிராக எழுதினார், ஆனாலும் அவர் ஒருமுறை கூட அற்புதங்களுக்கு எதிராக எந்தக் கேள்வியும் எழுப்பியதில்லை. கிறிஸ்து எகிப்தில் கற்றுக் கொண்ட மாயவித்தையினால் அவைகளைச் செய்ததாக செல்ஸஸ் கூறினார். ஏறக்குறைய 270ம் ஆண்டில், வல்லமை கொண்ட எதிரியான போர்ப்பைரி என்பவர் கிறிஸ்தவத்தை அழிக்க முயற்சி செய்தார். அவரது எழுத்துக்கள் புதிய ஏற்பாட்டுடன் பழக்கப் பட்டிருந்ததைக் காண்பித்தன, ஆனால் ஒருமுறையாவது அவர் அற்புதத்தை மறுக்கவில்லை. 303ல், பித்தினியாவின் ஆளுநராய் இருந்த ஹைரோக்ளெஸ் என்பவர், புதிய ஏற்பாட்டிற்குள் தவறுகள் மற்றும் உள்ளான முரண்பாடுகள் ஆகியவற்றைக் காண முயற்சி செய்தார். இதன் விளைவாக அவர் எழுதிய புத்தகமானது அற்புதங்களில் எதுவொன்றின் உண்மைத் தன்மையையும் அவமானப்படுத்தவில்லை. பேரரசரான ஜூலியன் (விசுவாசத்தை விட்டு விலகிச் சென்ற ஜூலியன்) என்பவர் கிறிஸ்தவத்தை வேருடன் களைந்தெறியத் தமது வல்லமையான அதிகாரத்தில் முடிந்த எல்லாவற்றையும் செய்தார். 361ல் அவரும் கூடத் தமது எழுத்துக்களால் இயேசுவின் மதத்தைத் தாக்கினார். அவரும் கூட எந்த ஒரு அற்புதத்தையும் மறுக்கவில்லை, மாறாக, இயேசு மக்களைக் குணப்படுத்தியதையும், அசுத்த ஆவிகளைத் துரத்தியதையும், தண்ணீரின் மேல் நடந்ததையும் அவர் ஒப்புக் கொண்டார்.

தொடக்க கால யூத மற்றும் புறஜாதி அவிசுவாசிகள், இயேசுவின் மதத்தை ஆதரிக்கும் இலேசான வஞ்சனையைக் கூட வெளிப்படுத்துவதில் மகிழ்ந்திருப்பார்கள். இந்த விமர்சகர்கள் அவரது அற்புதங்களுக்கு எதிராக ஒன்றும் கூற முடியாமல் மௌனமாய் இருப்பது என்பது அவைகளின் உண்மைத் தன்மைக்கான விருப்பமற்ற மற்றும் வலுவான சாட்சியம் ஆகும்.

### இயேசுவின் வாழ்வை விளக்கப்படுத்துவதற்கு அற்புதங்கள் அவசியமாய் இருக்கின்றன

சுவிசேஷ அற்புதங்களின் உண்மைத் தன்மைக்கு நான்காவது பலத்த காரணமாய் இருப்பது, இயேசுவின் வாழ்வானது முற்றிலும் இயற்கை நடைமுறைகளின்படியே விளக்கப்படுத்த இயலாதது என்ற உண்மை ஆகும். சிலர் இயேசுவின் இயல்பான வாழ்வில் இருந்து அவரது அற்புதத் தன்மையைப் பிரிக்க முயற்சி செய்து வெற்றியடையாமல் போனார்கள். இவ்விரண்டும் இசைவான ஒரு முழுமைக்குள் இரண்டறக் கலந்துள்ளன. இவ்விரண்டுமே ஒன்றின்றி இன்னொன்று நல்லறிவு வகையை ஏற்படுத்துவதில்லை.

இயேசுவின் அற்புத வல்லமைக்கு அவரது எதிராளிகளின் பதில் செயலே இயேசுவின் வாழ்வில் ஒரு பகுதியாக இருந்தது. அவர் அசுத்த ஆவிகளைத் துரத்தாதிருந்தால் இந்த பதில்செயலானது அவருக்கு எந்த ஒரு நன்மையையும் ஏற்படுத்தியிருக்காது.

இயேசு, காய்ச்சலாய்க் கிடந்த ஒரு பெண்மணியின் கையைப் பிடித்து காய்ச்சல் நீங்கும்படி கூறினார், பிறகு உடனடியாக அவளால் உபசரிக்கப் பட்டார். அற்புதத் தன்மையானது இயல்பான தன்மையுடன் ஒன்றிணைகின்றது.

மாபெரும் கும்பலானது இயேசுவைப் பின்தொடர்ந்தது. அவரது அற்புதங்களுடன் அவர் அக்கூட்டத்தாரிடம் செல்வாக்குப் பெற்றிருந்தது புரிந்து கொள்ளக்கூடியதாகும், ஆனால் அவைகள் இல்லாவிட்டால், அப்படிப்பட்ட ஈர்ப்பு சக்தி என்பது புரிந்த கொள்ளப்படாத ஒன்றாகும், மற்றும் உலகின் மிகச் சிறந்த மனிதர் ஒரு ஏமாற்றுக்காரராகச் சித்தரிக்கப்பட்டிருப்பார்.

இயேசுவின் அப்போஸ்தலர்கள் அவரிடத்தில் கொண்டிருந்த விசுவாசம் என்பது இயேசுவின் ஊழியத்தில் ஒரு முக்கியமான பாகம் ஆகும். அவர் ஒரு மிகை நடிப்புக்காரராயிருந்திருந்தால், அந்த விசுவாசமானது விளக்கிக் கூற முடியாததாயிருக்கும், ஏனெனில் அப்படிப்பட்ட விஷயத்தில் அவர் அவர்களுக்கு வியாபாரத்தின் இரகசியங்களை மட்டுமே கற்றுக் கொடுத்திருக்க முடியும். மூன்று ஆண்டளவாக அவரைப் பின்பற்றிய பிறகு, அவரது அற்புதங்கள் உண்மையானவை என்று அவர்கள் விசுவாசித்தார்கள்.

## முடிவுரை

எல்லா அற்புதங்களையும் விட மாபெரும் அற்புதமான இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்ற அற்புதத்தைப் பற்றிக் கவனிக்காமல்,

வேதாகமத்தின் அற்புதங்கள் பற்றிய எந்த ஒரு விவாதமும் மதிப்புள்ளதாகாது. அந்த அற்புதத்தைப் பற்றிய ஒரு பாடம் அடுத்துத் தொடருகின்றது. தயவு செய்து அதை நிறைவான கவனத்தோடும் முழுமையான ஜெபத்தோடும் கவனியுங்கள்.

# மாபெரும் அற்புதம்: இயேசுவின் உயிர்த்தெழுதல்

ஒரு நிலைப்பாட்டில் இருந்து கவனிக்கையில், ஒரு அற்புதமானது மற்றொன்றைப் போலவே கடினமானதாகவும், ஒன்று மற்றொன்றைப் போலவே சுலபமானதாகவும் இருக்கின்றது. ஒவ்வொன்றிற்கும் இயற்கைக்கு மேற்பட்ட வல்லமை அவசியப்படுகின்றது. இருப்பினும், இன்னொரு நிலைப்பாட்டில் இருந்து கவனிக்கையில், வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்ட மற்ற ஒவ்வொரு அற்புதமும், மரணம் தம்மேல் ஆளுகை செய்யாதபடிக்கு மரித்தோரிலிருந்து இயேசுவானவர் எழுந்ததைக் காட்டிலும் குறைவான விளைவை ஏற்படுத்துபவைகளாகவே இருக்கின்றன. இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது உறுதிப்படுத்தப்பட முடியுமென்றால், வேதாகமத்தின் மற்ற அற்புதங்கள் யாவும் நம்பகமானவைகளேயாகும். (ஹியுகோ மெக்கொர்ட்டின், “தேவன் அற்புதங்களைச் செய்திருக்கின்றாரா?” என்ற பாடத்தில் காணவும். இப்பாடம் பிப்ரவரி 2000த்தில் “உண்மையான உயிருள்ள தேவன்” என்ற தலைப்பில் வெளியான இன்றைக்கான சத்தியம் ஆங்கில இதழில் உள்ளது.) ஆகையால் வேதாகமத்தின் மற்ற அற்புதங்கள் யாவும் நிலைநிற்கும்படி அல்லது விழுந்து போகும்படியான அளவுக்கு, இயேசுவின் உயிர்த்தெழுதல் என்பது நிரூபிக்கப்படுதல் அல்லது பொய்யாக்கப்படுதல் என்பது அவ்வளவு முக்கியமானதாக இருக்கின்றது. ஆகவே, இயேசுவின் அடக்கத்திற்குப் பிறகு மூன்றாம் நாளில் என்ன நடந்தது என்பதைப் பற்றிய ஒரு சிறப்புப் பாடமானது, வேதாகமத்தின் அற்புதங்களை மெய்ப்பிக்க அல்லது பொய்ப்பிக்க ஒரு எளிய மற்றும் நேரடியான வழியாகும்.

## அவர் உயிர்ப்பிக்கப்படாதிருந்தால்

இயேசு உயிர்ப்பிக்கப்படாதிருந்தால் அவர் சரீரத்திற்கு என்ன நடந்திருக்கும் என்பதை ஒரு ஆய்வானது சாத்தியக் கூறுள்ள ஆறு விளக்கங்களைக் காண்பிக்கின்றது.

*(1) இயேசுவின் சீஷர்களால் சரீரம் களவாடப்பட்டது. தொடக்க காலத்தில் இயேசுவின் சீஷர்கள் அவரது சரீரத்தைக் களவாடிச் சென்றார்கள் என்ற கருத்து அவிசுவாசிகளால், மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக்கருத்தைப் பிரதான ஆசாரியர்களும் யூதர்களும் சேர்ந்து, கல்லறையைக் காவல் செய்த வீரர்களின் மூலமாக சொல்ல வைத்தார்கள் (மத். 28:1-15). இக்கருத்தானது, ஒவ்வொரு போர்வீரனும் தூங்கிவிட்டதாகவும், இருந்தாலும் அவர்கள் தூக்கத்தில் இருக்கையில் நடந்ததைக் குறித்துச் சாட்சி கொடுக்க முடிந்திருந்தது என்றும் யூகம் கொள்கின்றது. மற்றும், இக்கருத்தானது, திருட்டளவாய் உட்புகுந்த சீஷர்கள் இயேசுவின் உடலைச் சுற்றியிருந்த சீலையாகிய அடக்கத் துணிகளை உருவி ஓரிடத்தில் வைக்கவும் மற்றும் அவரது தலையைச் சுற்றியிருந்த துணியை நீக்கவும், மற்றும் அதைச் சுருட்டி, வெறுமையாக்கப்பட்ட கல்லறையில் வேறொரு இடத்தில் வைக்கவும் நேரம் எடுத்துக் கொண்டதாக அர்த்தப்படுத்துகின்றது. இக்கருத்தானது, மக்கள் உண்மையுள்ளவர்களாய் இருக்கும்படி வற்புறுத்திய இயேசுவின் சீஷர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்கின்றது.*

*(2) மயக்கக் கோட்பாடு. இரண்டாவது கோட்பாடு ஒன்று, இயேசு உண்மையில் ஒருபொழுதும் மரிக்கவில்லை என்றும், ஆனால் அவர் மயக்கம் மட்டுமே அடைந்திருந்தார் என்றும் கூறுகின்றது. பிறகு அவர் மயக்கம் தெளிந்த பிறகு, தாம் உயிர்த்து விட்டதாகச் சீஷர்களிடம் கூறினார் என்றும் இது கூறுகின்றது. இப்படிப்பட்ட கோட்பாடானது, இயேசு ஆறு மணி நேரமாய்ச் சிலுவையில் கடும் சோதனைக்குப் பிறகும், போர்வீரனால் ஈட்டியினால் குத்தப்பட்ட பிறகும், மூடி முத்திரையிடப்பட்ட கல்லறையில் மூன்று நாட்கள் இருந்த பிறகும் கூட (மரியாமலே) உயிருடன் இருந்தார் என்று யூகிக்கின்றது. இந்தக் கோட்பாடானது, காயம்பட்டு இரத்தம் சிந்திய இயேசுவானவர் எவ்விதத்திலும் நலம் பேணப்படாமலேயே, மூன்றாம் நாளில் தமது மயக்கத்தில் இருந்து தெளிவடைந்ததாகவும், தமது அடக்கத் துணிகளையும், தலைப்பாகையையும் தாமே எடுத்துப் போட்டதாகவும், "மிகவும் பெரியதாயிருந்த" (மாற். 16:4) ஒரு கல்லைத்தாமே தள்ளி விட்டு, சேவகர்களிடமிருந்து நழுவி, பதினைந்து மைல்கள் தூரம் எம்மாவுக்கு நடந்து சென்று பின் மீண்டும் திரும்பி வந்ததாக உரிமைகோருகின்றது.*

*உண்மையில் நடந்ததென்னவென்றால், இயேசுவின் மரணத்தைக் குறித்து நூற்றுக்கதிபதி சான்று கொடுக்கும் வரையிலும் பிலாத்து இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து இறக்க அனுமதிக்கவில்லை. மற்றும், இயேசு உண்மையிலேயே மரித்திருந்தார் என்பதை யூதர்கள் நம்பினார்கள்.*

*(3) இயேசுவின் விரோதிகளால் (அவரது) சரீரம் களவாடப்பட்டது. மூன்றாவது கோட்பாடொன்று, இயேசுவின் சரீரமானது அவரது விரோதிகளால் களவாடப்பட்டது என்று உறுதிப்படுத்த முயற்சி செய்கின்றது. இது உண்மையாயிருந்திருந்தால், கிறிஸ்தவமானது நிச்சயமாகவே இவ்வளவு நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாது என்பது நிச்சயமாகும். இயேசு மரித்தவராகவே இருந்தார் என்பதை நிரூபிக்க அவரது சரீரத்தை அவரது விரோதிகள் கொண்டு வந்திருந்தாலே, இப்புதிய*

மதமானது அன்றே ஒரு மரண அடியைப் பெற்றிருக்குமே.

*(4) மனதில் ஏற்பட்ட மாயத் தோற்றம்.* பெரும்பாலான அவிசுவாசிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த நான்காவது கோட்பாடானது, இயேசுவின் சீஷர்கள் தங்களின் மனதில் ஏற்பட்ட மாயத் தோற்றத்தை அனுபவித்தார்கள் - அதாவது அவர்கள் இயேசுவை மறுபடி காண வேண்டும் என்று மிகவும் விரும்பியதால், அவர்கள் அவரைக் கண்டதாக நினைத்தார்கள் - என்று கூறுகின்றது. இதற்கு மாறாக, அவரது சீஷர்கள் மறுபடியும் அவரைக் காண்பார்களென்று எதிர்பார்க்கவில்லை. உயிர்த்தெழுதல் பற்றி முதலாவது கேள்விப்பட்ட போது அவர்கள் அதை நம்பக்கூடவில்லை. உண்மையில், அவர்களே முதலாவது அவநம்பிக்கை யாளர்களாய் இருந்தார்கள். ஆனால் அவர்கள் தங்களின் அவநம்பிக்கையில் நேர்மையானவர்களாய் இருந்தார்கள். சந்தேக மனநிலையில் உள்ள நபர் ஒருவர் மனதில் ஏற்படும் மாயத்தோற்றத்தால் பாதிக்கப்படுவராவதில்லை. மேலும், சீஷர்கள் அப்படிப்பட்ட கற்பனையினால் பாதிக்கப்பட்டிருந்தால், பல உண்மைகள் விளக்கமளிக்கப்படாதவைகளாகி விடுகின்றன. மாயத் தோற்றத்தின் கோட்பாடானது வெறுமையான கல்லறையின் காரணம் என்ன என்பதை உள்ளடக்குவதில்லை. அது, கடலோரத்தில் (இயேசு) அப்பத்தையும் மீனையும் உண்டது பற்றியோ அல்லது ஐந்நூறுக்கும் அதிகமான மக்கள் ஒரே நேரத்தில் அந்த மாயத் தோற்றத்திற்கு உட்பட்டது ஏன் என்பது பற்றியோ விளக்கம் தருவதில்லை. மற்றும் அது, இரு மாதங்களுக்குக் குறைவான நாட்களில் மூவாயிரம் பேர் விசுவாசிகளாக்கப் பட்டது எப்படி என்பது பற்றியோ அல்லது, இயேசுவின் தரிசனங்கள் ஒழிந்து போய் விட்டாலும், அவரது உயிர்த்தெழுதலில் கொண்ட விசுவாசம் நிரந்தரமானது ஏன் என்பது பற்றியோ கவனிப்பதில்லை.

*(5) மனம் சார்ந்த உயிர்த்தெழுதல்.* ஐந்தாவது கோட்பாடொன்று, இயேசுவின் சரீரமானது மரித்த நிலையிலேயே இருந்தது என்றும், ஆனால் அவர் தம் போதனையின்படி வாழ்ந்தார் என்பதை அவரது சீஷர்கள் மனதில் கொண்டிருந்ததால், அவர்களைப் பொறுத்தமட்டில் இயேசு இன்னமும் வாழ்ந்து கொண்டிருந்தார் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இவ்வழி முறையில் அவர்கள், இயேசு மனிதர்களின் இருதயங்களில் வாழும்படியாக (மனத்தளவில்) உயிர்ப்பிக்கப்பட்டதாகப் பேச முடிந்தது என்று கூறுகின்றது. வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், இந்தக் கோட்பாட்டின்படி, உயிர்த்தெழுதல் என்பது வெறுமனே மனத்தளவில் ஆனதாகும். இருப்பினும், இந்தக் கோட்பாடானது வெறுமையாயிருந்த கல்லறையைப் பற்றி விளக்கம் தரத் தவறுகின்றது. மேலும், இது ஆறுதலற்றுக் கிடந்த சீஷர்கள் திடீரென்று கிறிஸ்துவுக்கென்று தைரியம் பெற்ற வேதசாட்சிகளாய் மாறி, உயிர்த்த இயேசுவைத் தாங்கள் தொட்டுணர்ந்ததாகச் சாட்சியம் கூறியதற்கும் விளக்கம் தரத் தவறுகின்றது.

*(6) ஆவியின் குறிக்கோள் கொண்ட தரிசனம்.* இது மனரீதியான உயிர்த்தெழுதல் என்ற கோட்பாட்டின் ஒரு மாறுபாடு கொண்ட நிலையாக உள்ளது. அதாவது, இயேசுவின் சரீரம் உயிர்த்தெழாதிருந்தாலும், அவரது மகிமை பெற்ற ஆவியைச் சீஷர்கள் உண்மையில் கண்டார்கள். அவிசுவாசி

*களாயிருந்த சீஷர்கள் திடீரென்று உயிர்த்தெழுதலின் விசுவாசிகளானது எப்படி என்பதை விளக்கிக் கூற வேண்டிய அவசரத் தேவை இருந்ததால் இந்தக் கோட்பாடு உண்டாக்கப்பட்டது.*

*இருப்பினும், ஒரு அற்புதத்திற்குப் பதில் இன்னொரு அற்புதத்தை வைப்பதென்பது இந்தக் கோட்பாட்டின் பெலவீனம் ஆகும்: சரீர உயிர்த்தெழுதலை விசுவாசிப்பது என்பது கடினமானதாயிருக்கையில், ஆவி ஒன்றைக் காணுதல் என்பதை நம்புவதும் அதே அளவு கடினமானதேயாகும். மற்றும், இந்தக் கோட்பாடும் கூட, கல்லறை வெறுமையானது எப்படி என்று விளக்கப்படுத்துவதில்லை. மேலும், இயேசு தம் சரீரத்தைத் தொட்டுப் பார்க்கும்படி அனுமதித்தார், அவர் தாம் வெறும் ஆவியல்ல என்று நிரூபிப்பதற்காக தம் சீஷர்களுடன் அப்பம் புசித்தார்.*

## *இயேசுவின் சரீர உயிர்த்தெழுதலுக்கான ஆதாரங்கள்*

*இயேசு தாம் மரித்த மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்ற முடிவுக்கு வழி நடத்துபவை குறைந்தது எட்டு ஆதார வரிசைகள் ஆகும்: (1) திறந்த கல்லறை, (2) வெறுமையாக்கப்பட்ட கல்லறை, (3) பிணத்தைச் சுற்றியிருந்த துணி, (4) மடித்து/சுருட்டி வைக்கப்பட்டிருந்த தலைத்துணி, (5) கண்ணால் கண்ட சாட்சிகள் (6) புதிய ஏற்பாட்டின் நம்பகத் தன்மை, (7) கிறிஸ்தவம் நிலைத்திருத்தல் மற்றும் (8) நினைவுகூருதல்கள்.*

*(1) திறந்த கல்லறை. கல்லறையின் மேல் உருட்டி வைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய கல் மற்றும் கல்லறையின் மீது வைக்கப்பட்டிருந்த முத்திரை ஆகியவற்றை மீறி கல்லறை எப்படித் திறந்தது என்பது கவனிக்கப்பட வேண்டிய கேள்வியாகும். ரோம (போர்ச்) சேவகர்கள் கல்லறையைத் திறக்க வில்லை என்பது நிச்சயம், ஏனென்றால் அது திறக்கப்படாதபடிப் பார்த்துக் கொள்வதற்காகவே அவர்கள் அங்கு நிறுத்தப் பட்டிருந்தார்கள். யூதர்கள் கல்லறையைத் திறக்கவில்லை என்பது நிச்சயம், ஏனென்றால், யாரேனும் உட்புகுந்து ஏதேனும் செய்து விடாதபடிக்குக் காவல் செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் (யூதர்கள்) தான் வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள். சீஷர்கள் கல்லறையைத் திறக்கவில்லை என்பது நிச்சயம், ஏனென்றால் அவர்களால் காவலர்களை வெற்றி கொண்டிருக்க முடியாது, அவர்கள் அவ்வித விருப்பம் கொண்டிருந்ததும் இல்லை. இருந்தாலும், எப்படியோ கல்லறை திறக்கப்பட்டது. மத்தேயு சுவிசேஷத்தில் கூறுகின்றபடி, தூதன் ஒருவனால் கல் புரட்டித் தள்ளப்படாதிருந்த தென்றால், கல்லறையைத் திறந்தது யார் என்ற கேள்வி, பதில் அளிக்கப்படாததாகவே நிலைத்திருக்கின்றதாகி விடும்.*

*(2) வெறுமையாக்கப்பட்ட கல்லறை. பெரிய கல் எப்படிப் புரட்டப்பட்டது என்ற பிரச்சனை கவனிக்கப்பட வேண்டிய தாயிருப்பதோடு, கல்லறை எப்படி வெறுமையாயிற்று என்பது இன்னொரு முக்கியமான விஷயமாகும். ரோமக்காவலர் அங்கிருந்த பிணத்தை அகற்ற விரும்பியிருப்பார் என்பதற்குக் காரணத்தை ஒருவரும் கற்பனை செய்ய*

இயலாது. அந்த உடல் கல்லறையிலேயே இருக்க வேண்டும் என்பதை யூதர்கள் நிச்சயப் படுத்திக் கொள்ள விரும்பினார்கள். இயேசுவின் சரீரத்தை அவருடைய சீஷர்கள்தான் கல்லறையில் வைத்தார்கள்; அது அங்கிருக்க வேண்டுமென்றே அவர்கள் விரும்பினார்கள் - அப்படியே அவர்கள் அந்த உடலை அப்புறப்படுத்தியிருந்தாலும், காவலர்களிடமிருந்து அவர்கள் தப்பியிருக்க முடியாது. இயேசு தம் சொந்த தெய்வீக வல்லமையினால் உயிர்த்தெழுந்து, கல்லறையை விட்டு வெளியே சென்றிராதிருந்தால், கல்லறை வெறுமையானது எப்படி என்பது பதில் தரப்படாத ஒரு கேள்வியாகவே நிலைத்திருப்பதாயிருக்கும்.

(3) பிணத்தைச் சுற்றியிருந்த துணி. பணக்கார மனிதர் ஒருவரால் வாங்கப்பட்டிருந்த உயர் வகை லினன் துணி, Sindon (இந்தியாவின் தரம் மிக்க துணி) பிணத்தைச் சுற்றப் பயன்பட்டிருந்தது. அந்தத் துணியானது கல்லறைக்குள்ளேயே இருந்தது. கல்லறைத் திருடர்கள் உடலை எடுத்துச் சென்றிருந்தால், அவர்கள் விலையுயர்ந்த அந்த லினன் துணியையும் விரும்பியிருப்பார்களே. சீஷர்கள் திருட்டளவாய்க் காவலர்கள் காணாமல் பெரிய கல்லைப் புரட்டி, உடலைக் களவாடிச் சென்றிருந்தால், அவர்கள் இயேசுவின் உடலில் இருந்து அந்தத் துணியை அகற்ற நேரத்தைச் செலவிட்டது ஏன் என்பதை ஒருவர் கற்பனை செய்ய முடியாது. அந்தச் சவ அடக்கத் துணியை இயேசுவே தமது உடலில் இருந்து நீக்கிப் போடாதிருந்தார் என்றால், அது கல்லறையிலேயே விடப்பட்டது ஏன் என்ற விஷயமானது அதிசயமானதாகவே இருக்கின்றது.

(4) மடித்து/சுருட்டி வைக்கப்பட்டிருந்த தலைத் துணி. தலையைச் சுற்றியிருந்த துணியானது பிணத்தைச் சுற்றியிருந்த மற்ற துணிகளுடன் வைக்கப்படாமல் வெறுமையாக்கப்பட்ட கல்லறையினுள்ளேயே வேறொரு இடத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அது அவசரமாய் எறிந்து விடப்படாமல், ஒழுங்காய் மடித்து வைக்கப்பட்டிருந்தது. தலையைச் சுற்றியிருந்த துணியை யார் அகற்றியிருந்தாலும், அவர் அவசரப் படாமல், நேர்த்தியுடன் செயல்பட்டிருந்தார். சீஷர்களோ அல்லது கல்லறைத் திருடர்களோ யாராய் இருந்திருப்பினும், தலையைச் சுற்றியிருந்த துணியை அகற்றுவதற்கு நேரத்தைச் செலவிட்டிருக்க மாட்டார்கள்; அப்படியே அவர்கள் செலவிட்டிருந்தாலும், அவசரமாகவும், கவனமின்றியும் அதைச் செய்திருப்பார்கள். இயேசு வேண்டுமென்றே அந்தத் தலைத் துணியை அகற்றி மடித்து வைக்காதிருந்தால், அது ஏன் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது என்பது அறியப்படாததாகவே நிலைத்திருக்கும்.

(5) கண்ணால் கண்ட சாட்சிகள். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவருடன் உண்டு, குடித்ததாகவும், தங்கள் கண்ணால் கண்டதாகவும், அவர் பேசியதைக் கேட்டதாகவும், அவரைத் தொட்டுப் பார்த்ததாகவும் அப்போஸ்தலர்கள் சாட்சியம் கொடுத்துள்ளார்கள். ஆக, அவர்கள் உலகத்தின் தலை சிறந்த ஒரு நபரால் வஞ்சிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது ஒரு கதை ஏற்படுத்தும்படி சதித் திட்டம் தீட்டியிருக்க வேண்டும். அவர்கள் அவரைத் தொட்டுப் பார்த்து, காயம்பட்ட அவரது

கரங்கள் மற்றும் விலாவைக் காண முடிந்திருந்தது என்றால், அவர் பேசியதைக் கேட்க முடிந்திருந்தது என்றால், அவர்கள் வஞ்சிக்கப் பட்டிருக்க முடியாது. இன்னொரு கண்ணோட்டத்தில், அவர்கள் வேண்டுமென்றே ஒரு பொய்யைப் புனைந்துரைத்திருந்தால், புண்பட்ட மனச்சாட்சிகளைப் பெறுவதென்பதே அவர்களின் ஒரே வெகுமதியாய் இருந்திருக்கும். அவர்கள் தங்கள் விசுவாசத்திற்காக சரீரத் தேவைகளில் குறைபாடுகளையும் (உணவு, உடை, இருப்பிடத் தேவைகள்), கொடுமையாக நடத்தப்படுதலையும் அனுபவித்தார்கள். அவர்கள் வீடற்றவர்களானார்கள்; அவர்கள் திட்டப்பட்டு, துன்புறப்பட்டு, பழி தூற்றப்பட்டார்கள். உண்மையில், அவர்கள் கிறிஸ்துவுக்காக உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகின்ற அழுக்கைப் போலவும், மதியீனர்களைப் போலவும் ஆனார்கள் (1 கொரி. 4:10-13). சத்தியம் பேசுவதை அவர்கள் வலியுறுத்தியவர்களாய் இருக்க, அவர்கள் பொய்யர்கள் என்று நாம் நம்ப வேண்டுமென்று சில கோட்பாடுகள் கேட்கின்றன. அப்போஸ்தலர்கள் தங்கள் சாட்சியத்தில் வஞ்சிப்பவர்களாகவோ, நேர்மையற்றவர்களாகவோ இருந்ததில்லை என்பதால், இருக்கின்ற ஒரே மாற்றுக் கருத்து என்னவென்றால், அவர்கள் உண்மையைக் கூறினார்கள் என்பதேயாகும். கண்ணால் கண்ட சாட்சிகள் என்ற வகையில் அப்போஸ்தலர்களின் சாட்சியமானது சரீர உயிர்த்தெழுதலுக்குக் கனமான ஆதாரமாக இருக்கின்றது.

(6) புதிய ஏற்பாட்டின் நம்பகத் தன்மை. புதிய ஏற்பாட்டில் தொகுக்கப்பட்டுள்ள எழுதப்பட்ட பதிவேடுகள் யாவும் கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி கொடுக்கின்றன. வரலாற்றில் மிகவும் நம்பகமான புத்தகங்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இந்தப் புத்தகங்களை இலேசாக எண்ணி விட முடியாது. சரீர உயிர்த்தெழுதல் ஒரு கதையென்றால், இவைகள் தங்களுக்குள் கட்டமைவு கொண்டுள்ள கனத்த/பலத்த ஆதாரமானது, விளக்கம் தரப்பட முடியாததாக இருக்கும். நன்கு உறுதியளிக்கப்பட்டு, நம்பகம் நிறைந்ததாக உள்ள 27 புத்தகங்களின் தொகுதியானது உலகின் மாபெரும் ஏமாற்று வேலை என்று வரிசைப் படுத்தப்படுவது என்பது நல்லறிவுள்ள செயலாக இல்லை. உயிர்த்தெழுதல் என்பது கேலிக்கூத்தாக இருந்தால், இந்த இருபத்தேழு புத்தகங்களும் இவ்வளவு நம்பிக்கைக்குரியவைகள் ஆனது எப்படி என்ற கேள்வி, பதில் அளிக்கப்படாததாகவே இருந்திருக்கும்.

(7) கிறிஸ்தவம் நிலைத்திருத்தல். இயேசுவின் உயிர்த்தெழுதல் உண்மையானதென்றால், கிறிஸ்தவத்தின் பிறப்பும் வளர்ச்சியும் சுலபமாய் விளக்கப்படக் கூடியவைகளாகும். இருந்தாலும், அதன் தலைவர் ஒரு பிணமாகவே இருந்திருப்பார் என்றால், கல்லறையில் இருந்த சரீரத்தோடு உயிர்த்தெழுந்த இயேசுவை அடிப்படையாகக் கொண்ட - இவ்வகையில் ஒன்றே ஒன்றாக உள்ள - கிறிஸ்தவ சமயத்தைப் பல லட்சக்கணக்கான மக்கள் ஏற்றுக் கொண்டது வினோதமான செயலாக அல்லவா இருக்கும். அந்த உயிர்த்தெழுதல் மட்டும் இல்லாதிருந்தால், கிறிஸ்தவமானது தனது பிறப்பிலேயே மரித்திருக்கும்.

*(8) நினைவுகூருதல்கள். இயேசுவின் உயிர்த்தெழுதல் உண்மை யென்றால், கர்த்தருடைய பந்தி மற்றும் கர்த்தருடைய நாள் ஆகியவற்றின் தனிச் சிறப்பு என்பது அர்த்தமுள்ளதாய் இருக்கின்றது. சரீர உயிர்த்தெழுதல் இல்லையென்றால், இந்த நினைவுகூருதல்கள் அர்த்தமற்றவைகளாகின்றன.*

*சரீர உயிர்த்தெழுதல் நடந்தது என்றால், இவ்விடத்தில் அட்டவணைப் படுத்தப்பட்ட ஆதாரங்கள் ஒவ்வொன்றையும் எளிய பதில் ஒன்று விளக்கப்படுத்துகின்றது. வேறு எந்த விளக்கமும் இவ்வுண்மைகள் எல்லாவற்றுடனும் ஒத்துப் போவதில்லை. மற்ற விளக்கங்கள் தீர்த்து வைக்கும் பிரச்சனைகளைக் காட்டிலும் ஏற்படுத்தும் பிரச்சனைகள் ஏராளமாய் உள்ளன. அவைகள் கேள்விகளையும், உறுதிப்பாடின்மை யையும், குழப்பத்தையும் விட்டுச் செல்லுகின்றன. இயேசுவின் உயிர்த்தெழுதல் என்ற கருத்தைப் பற்றிய முடிவுக்கு ஒருவர் வர வேண்டுமானால் இந்த எட்டு ஆதாரங்களும் கையாளப்பட வேண்டும்.*

## *முடிவுரை*

*இயேசு உயிர்த்தெழவில்லையென்றால் அவரது சரீரத்திற்கு என்னவாயிற்று என்பதைப் பற்றி ஆறு விளக்கங்களை நாம் பார்த்தோம். அவைகளின் செயல்விளக்கக் குறைவுகளையும், திருப்தியளிக்கத் தவறிய பண்பையும் சோதித்தவைகள் காண்பிக்கின்றன. இயேசு மரித்தோரிலிருந்து உண்மையாகவே உயிர்த்தெழுந்தார் என்ற முடிவு மட்டுமே எல்லா ஆதாரத்துடனும் ஒத்துப் போவதாகவும், நம்பிக்கை தருவதாகவும் இருக்கின்றது.*